**I ADDL. DISTRICT & SESSIONS COURT, VELLORE**
**DEPOSITIONS OF WITNESSES**
**(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE)**
**DEPOSITIONS OF WITNESSES D.W.1**
**OS.NO.129/2019**

**Name** : Saminathan
**Father/Husband Name** : Govindasamy

**Age** : 75

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 10.06.2025**

இரு தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**விசாரணை தொடங்கும் நேரம்: 03.50 pm**

குறுக்கு விசாரணை தொடர்ச்சி

நான் விவசாய வேலை செய்கிறேன். 2ம் பிரதிவாதி சண்முகமும் விவசாய வேலை செய்து வருகிறார். இறந்து விட்ட இன்னொரு தம்பி மூர்த்தி மின்சார துறையில் லைன்மேன். அவர் காலமானதால் அவரின் வேலை அவரின் மனைவியான 3ம் பிரதிவாதி சரிதாவிற்கு வழங்கியுள்ளனர். எனது அப்பாவிற்கும் எனது குடும்பத்திற்கும் வேறு வருமானம் கிடையாது. விவசாயம் தான். விவசாய வருமானத்தை கொண்டு தான் எனது தந்தை 1971ல் ஒரு சொத்தும் 1981ல் ஒரு சொத்தும் வாங்கினார். எனது அப்பா இருக்கும்போது பெண் பிள்ளைகளை திருமணம் செய்து கொடுத்து விட்டு ஆண் பிள்ளைகள் அனைவரும் ஒன்றாக தான் இருந்தோம். எனது தந்தை 2015ல் இறந்தார். என் ஊரில் வசிக்கும் சுப்பன் மகன் குப்பன் தெரியாது. சின்னகுழந்தை மகன் முருகன் எனது சம்மந்தி. அவர் இந்த வழக்கில் 3வது சாட்சியாக விசாரிக்கப்பட்டுள்ளார். அதே போல் நடேசன் மகன் வேல்முருகன் எனது

சம்மந்தி. அவர் 2ம் சாட்சியாக விசாரிக்கப்பட்டுள்ளார். சுப்பன் மகன் குப்பன் 3 வாதி கிருஷ்ணவேணியின் கணவர் எனக்கு உறவினர் என்றால் சரிதான். அவர் இந்த வழக்கில் 4ம் சாட்சியாக விசாரிக்கப்பட்டுள்ளார். 3 பெண்களுக்கும் திருமணம் செய்து வைத்தார் என்றால் சரிதான். வாக்குமூலம் 5ம் பத்தியில் எனது தந்தை தாவா சொத்துக்களை முழு உரிமையுடன் அனுபவித்து வந்தார் என்பதை காட்டுவதற்கு ஆவணம் தாக்கல் செய்யவில்லை. எனது அப்பா காலமாவதற்கு முன்பு சில மாதங்களாக உடல்நிலை சரியில்லாமல் இருந்தார் என்றால் சரியல்ல. நன்றாக தான் இருந்தார். எனது அப்பா சம்பாரித்தது 30 செண்டு ஒன்று, 36 செண்டு ஒன்று. வீட்டு மனை 4 செண்ட் வாங்கினார். அந்த பத்திரம் தான் 1977 வா.த.சா.7 என்றால் சரிதான். பொன்னுசாமி கவுண்டர் வகையறாவிடம் இருந்து 36 செண்ட் 25.02.1981ல் வாங்கினார். அது வா.சா.ஆ.8. அதை தவிர எனது தந்தை வேறு சொத்துக்கள் வாங்கவில்லை என்றால் சரிதான். இந்த சொத்துக்கள் அனைத்தும் மூதாதையர் நிலத்தில் விவசாயம் செய்து வந்த வருமானத்தில் வாங்கியது என்றால் சரிதான். மூதாதையர் மூலம் எவ்வளவு வந்தது என்றும் இந்த சொத்து தவிர எனது தந்தை எவ்வளவு வாங்கினார் என்பதும் எனக்கு தெரியாது. என் அம்மா பெயர் சின்னபொண்ணு. என் அப்பாவிற்கு முன்பாகவே காலமாகி விட்டார். அப்போது எனக்கு திருமணம் ஆகவில்லை. என் தாயார் இறக்கும் போது 10 சவரன் செயின். 7 சவரன் அட்டிகை, 5 சவரன் அட்டிகை, 1 சவரன் ஸ்டட், 1 சவரன் மாட்டல் ஆகியவற்றை விட்டு சென்றார் என்றால் சரிதான். மேற்படி நகைகளை நாங்கள் எடுத்து கொண்டோம் என்று சொன்னால் சரியல்ல. வாதிகள் தான் எடுத்து சென்றார்கள். வழக்கிற்காக அவர்கள் எடுத்து சென்றதாக தவறாக

சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. என் சகோதரிகள் என் அப்பாவிடம் வந்து பாகப்பிரிவினை கேட்டார்கள் என்று சொன்னால் சரியல்ல. பாகம் கொடுக்கிறேன் என்று என் தந்தை கூறினார் என்றாலும், நான் மற்றும் எனது தந்தை ஆகியோர்கள் அவர்களை பாகம் கொடுப்பதாக சொல்லி அழைத்து சென்று 09.03.2015 அன்று 3 பத்திரத்தில் கையெழுத்து வாங்கியதாக சொன்னால் சரியல்ல. பூங்கொடி கையெழுத்து போடும் போது அவர்கள் சின்ன வயதில் இருந்து நமக்காக உழைத்து கொண்டிருக்கிறார்கள். அதனால் சொத்து வேண்டாம் என்று சொன்னால் சரியல்ல. அவர்களுக்கு பங்கு இருக்கிறது என்று சொன்னால் சரியல்ல. வா.த.சா.ஆ.12, முதல் 14 வரை பத்திரங்களில் பங்கு கொடுப்பதாக சொல்லி ஏமாற்றி கையெழுத்து வாங்கியதாக சொன்னால் சரியல்ல. தாவா சொத்தின் ஒரு பகுதியில் கட்சியினுடைய மீட்டிங் நடக்கிறது என்றால் எனக்கு தெரியாது. மூலகேட்டு செங்கநல்லூர் கேட்டு பஞ்சாயத்தில் சாலையோரம் உள்ள நிலத்தில் அவ்வப்போது கட்சி மீட்டிங் வாதிகளின் அனுமதியோடு நடக்கும் என்றால் எனக்கு தெரியாது. நான் அந்த இடத்திலிருந்து ஒரு கிலோமீட்டர் தூரத்தில் உள்ளேன். கொல்லிக்கு போய் வருவேன். (வழக்குரையே இல்லாமல் கேள்வி கேட்பதாக ஆட்சேபணை தெரிவிக்கபட்டது) வாதிகள், எங்களை ஏமாற்றி 3 ஆவணங்களை கைப்யொப்பம் பெற்று கொண்டீர்கள் என்று அவ்வப்போது வந்து பாகம் கேட்டார்கள் என்றால் சரியல்ல நாங்கள் பாகம் கொடுப்பதாக கூறி காலம் கடத்தி வந்தோம் என்றால் சரியல்ல. எனது சம்மந்தி கிருஷ்ணவேணி வீட்டுகார் ஆகியோர்கள் வந்து கேட்கும் போது நான் பாகம் கொடுக்கிறேன் என்றும், என் மீது நம்பிக்கை இல்லை என்றால் ஆவணங்களை வைத்து கொள்ளுங்கள் என்றும் வா.த.சா.ஆ.12 முதல் 14

அசல் ஆவணங்களை அவர்களிடம் கொடுத்து விட்டு பாகம் கொடுத்த பிறகு அந்த பத்திரத்தை வாங்கி கொள்கிறேன் என்று கூறினேன் என்றால் சரியல்ல. அந்த 3 அசல் ஆவணங்களும் வாதிகளிடம் உள்ளது என்றால் அவரவர்கள் பத்திரம் அவர்களிடமே இருந்தது என் பத்திரத்தை சாந்தியும், கிருஷ்ணவேணியும் எங்கள் வீட்டுக்கு வரும்போது எடுத்து போய் வைத்து கொண்டார்கள். என்றைக்கு எடுத்து போனார்கள் என்று தேதி தெரியாது. போலிசில் புகார் கொடுக்கவில்லை. நான் போட்ட பதில் மனுவிலும் அதை பற்றி சொல்ல வில்லை. தற்போது இந்த வழக்கிற்காக தவறாக சொல்கிறேன் என்றால்சரியல்ல. தற்போது சகோதரர்களின் 3 பத்திரங்களும் சகோதரிகளிடம் உள்ளது என்றால் சரிதான். என் பெயரில் சாமிநாதன் உள்ள ஆவணம் வா.சா.ஆ.12, சண்முகம் பெயரில் உள்ளது வா.சா.ஆ.13, சரிதா பெயரில் உள்ளது வா.சா.ஆ.14. என்னிடம் காட்டப்படுவது அசல் ஆவணங்கள் தான். அவை முறையே வா.த.சா.ஆ.15 (ஆவண எண்.1314/2015), 16 (ஆவண எண்.1315/2015) மற்றும் 17 (ஆவண எண்.1316/2015). அதனுடைய சான்றிட்ட ஆவணங்கள் வா.த.சா.ஆ.12 முதல் 14. என்னிடமிருந்து என் சம்மந்தியும் கிருஷ்ணவேணியின் கணவரும் என்னிடம் வந்து கேட்கும் போது நாங்கள் பாகம் கொடுக்கிறோம் என்று உறுதி அளித்தோம் என்றால் சரியல்ல. இன்றைய தேதி வரை அவர்கள் கூட்டு சுவாதீனத்தில் தான் இருக்கிறார்கள் என்றால் சரியல்ல. இன்றைய தேதி வரை நாங்கள் தனி தனியாக சுவாதீணத்தில் இருக்கிறோம் என்று காட்டுவதற்கு சிட்டா அடங்கல் மற்றும் சொத்துவரி போன்ற ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். தாவா சொத்து எனது தாத்தா குள்ள கவுண்டருக்கு மூதாதையர் வழியாக வந்த சொத்து என்பதால் வாதிகளுக்கும் பாகம் உள்ளது என்று

சொன்னால் சரியல்ல. 2005 சட்டப்படி வாதிகளுக்கும் பாகம் உள்ளது என்று சொன்னால் எனக்கு தெரியாது. வாதிகளுக்கு தலா 3/6 பங்கு பாகம் உள்ளது என்று சொன்னால் சரியல்ல. வா.தசா.ஆ,.12 முதல் 14 வரை ஆவணங்களை செல்லாத பத்திரம் என்று ரத்து செய்ய வேண்டுமென்று கோரியது சரியல்ல. இந்த வழக்கு முடியும் வரை பிரதிவாதிகளான நாங்கள தாவா சொத்து குறித்து எந்த விதத்திலும் வில்லங்கம் ஏற்படுத்த கூடாது என்று வாதிகள் கூறுவது சரியல்ல. வாதிகள் கோரியபடி முதல் நிலை தீர்ப்பாணை வழங்க வேண்டுமென்று சொன்னால் சரியல்ல. தாவா படி தீர்ப்பாக வேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

பிரதிவாதிகள் 4 முதல் 6 இளவர்களின் நீதிமன்ற பாதுகாவலர் ஆஜரில்லை. எனவே இளவர்கள் சார்பில் குறுக்கு விசாரணைக்காக வாய்தா ஒத்தி வைக்கப்படுகிறது.

**விசாரணை முடிந்த நேரம்: 4.30 pm**

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பித்து சரி என்று ஒப்புக் கொண்டு கையெழுத்திட்டார்.

(Sd/Tmt.G.Santhi)
முதலாவது கூடுதல் அமர்வு நீதிபதி,
வேலூர்.